29th January 1966]

கூறினேன். முதியோர்களுக்கு 20 ரூபாய் கொடுப்பது என்றால், சில நிபந்தனைகளின் பேரில் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு வேறு சொத்து இல்லாமல் இருக்கவேண்டும்; இவ்வளவு வயது இருக்கவேண்டும்; வேறு வருமானம் இல்லாமல் இருக்கவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு வேறு வசதிகள் இருக்கலாம். பென்ஷன் வேண்டாம் எங்களுக்கு முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் வந்தால் போதும் என்று அதற்கு அருகதை உள்ளவர்களாக இருந்தால் அதுவும் கருதப்படலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பென்ஷன் கொடுக்கப்படுவது அவர்கள் அரசாங்கத்திற்கு செய்த சேவைக்காக. அவர்கள் பதவியில் இருந்து விலகும் சமயத்தில் அவர்கள் எவ்வளவு பெற்றுக் கொண்டிருந்தார்களோ, அதற்கான விகிதாசாரப்படி கொடுக்கப்படுகிறது. விலைவாசி ஏறிக் கொண்டே போவதால் சம்பளத்தின் மதிப்பு குறையும்போது பென்ஷனின் மதிப்பும் குறைகிறது. அதை உத்தேசித்து இதை மறுபரிசிலனை செய்ய உத்தேசமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தப் பிரச்னை அப்போதைக்கப்போது அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிற விஷயம். ஒரு முறை இது ஓரளவுக்கு உயர்த்தப்பட்டும் இருக்கிறது. மேலும் உயர்த்துவது என்பதுதான் பிரச்னை. தற்காலம் அம்மாதிரி முடிவு செய்வதாக இல்லையென்று கூறினேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு கணவனுக்குப் பிறகு மனைவிக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. நம் அரசாங்கத்திலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் மனைவிகளுக்கும் அதுபோன்று பென்ஷன் கொடுக்க உத்தேசமிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு கூறியதை விட வேறு ஒன்றும் தகவல் என்னிடம் இல்லை.

Laboratories in Secondary Schools

*3 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to push through a "Crash Programme" for strengthening and improving Science Laboratories in Secondary Schools in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The Government of India have sanctioned grants at the rate of Rs. 4,000 per school under the Crash Programme for the improvement of Secondary Education as follows :—

	Rs. in lakhs
1964–65	6.39
1965–66	9.53

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானத் துறையில் தனிப் பாடமாக எடுத்துக் கொண்டு படிக்கவேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. எல்லாப் பள்ளிகளிலும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் வேண்டும். எவ்வளவு உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன ? இன்னும் எவ்வளவு பள்ளிகளில் வைக்க வேண்டியிருக்கிறது ? எவ்வளவு காலத்தில் அது முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது 2,200 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் ஆய்வுக் கூடங்கள் அவசியம் வேண்டியதுதான். அதை எவ்வளவு சீக்கிரத்தில் நிறை வேற்றுவது என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் 200 கழக உயர்நிலைப் பள்ளிகளில் ஸயன்ஸ் லாபரட்டரீஸ் வைக்க ஒவ்வொன்றுக்கும் 17,000 ரூபாய் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது இல்லாமல் வேறு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் திட்டம் கழக உயர்நிலை பள்ளிகளுக்கு மட்டுமா ? தனியார் நடத்தும் பள்ளிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கழக உயர்நிலைப் பள்ளிகள் தான் முக்கியமானவை. அதன் பூராப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு கிருன்ட், எந்தவிதத்தில் உதவி, அளிக்கக் கூடுமோ அது அளிக்கக் கூடும்.

திரு. சா. கணேசன் : இம்மாதிரிப்பட்ட சோதனைக்கூடம் அமைப்பது போலவே, பள்ளிகளில் பிற பாடங்களை சொல்லிக் கொடுக்கின்ற பொழுது, குறிப்பாக மொழிப்பாடங்களை சொல்லிக் கொடுக்கின்ற நேரத்தில், உச்சரிப்புப் பிழைகள் பெரும்பாலான இடங்களில் பரவலாக—எல்லா இடங்களிலும் மாணுக்கர்களிடத் திலும் ஆசிரியர்களிடத்திலும் இருந்து வருகின்றன. இம்மாதிரிப் பட்ட ஒலிப்பிழைகள் வராத வகையில் விஞ்ஞான ரீதியில் மொழிப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதற்கும்—பேச்சு, ஒலி இவைகளில் தக்க பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

கடலாடி தொடக்கப்பள்ளிக் கட்டடம்

* 4 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பஞ்சாயத்து யூனியனில் 1964-ம் ஆண்டு மே மாதம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிக் கட்டடம் இடிந்ததில் சேதம் ஏற்பட்டது உண்மையா ? ஆமெனில் விவரம் என்ன ?